**பெண் :** ......................................

**பெண் :** ராசாவே உன்ன
காணாத நெஞ்சு
காத்தாடி போலாடுது
ராசாவே உன்ன
காணாத நெஞ்சு
காத்தாடி போலாடுது

**பெண் :** ஸ்ரீ ராமனோட
பூ மாலை போட
வைதேஹி உள்ளம் வாடுது..

**பெண் :** ராசாவே உன்ன
காணாத நெஞ்சு
காத்தாடி போலாடுது..

**பெண் :** {கண்ணுகொரு வண்ணக்கிளி
காதுக்கொரு கானக்குயில்
நெஞ்சுக்கொரு வஞ்சிக்கொடி
நான் தான் அய்யா} (2)

**பெண் :** தத்தித் தவழும்
தங்கச் சிமிழ் நான்
பொங்கி பெருகும்
சங்கத் தமிழ் நான்

**பெண் :** முத்தம் தர
நித்தம் வரும் நட்சதிரம்
யாரோடு இங்கு எனக்கென்ன பேச்சு
நீ தானே கண்ணா
நான் வாங்கும் மூச்சு
வாழ்ந்தாக வேண்டும்
வா வா கண்ணா..

**பெண் :** ராசாவே உன்ன
காணாத நெஞ்சு
காத்தாடி போலாடுது
ஸ்ரீ ராமனோட பூ மாலை போட
வைதேஹி உள்ளம் வாடுது..

**பெண் :** ராசாவே உன்ன
காணாத நெஞ்சு
காத்தாடி போலாடுது..

**பெண் :** {மங்கை ஒரு கங்கை என
மன்னன் ஒரு கண்ணன் என
காதில் ஒரு காதல் கதை
சொன்னால் என்ன..} (2)

**பெண் :** அத்தை மகனோ
மாமன் மகனோ
சொந்தம் எதுவோ பந்தம் எதுவோ
சந்தித்ததும் சிந்தித்ததும் தித்தித்திட
அம்மாடி நீதான் இல்லாத நானும்
வெண்மேகம் வந்து நீந்தாத வானம்
தாங்காத ஏக்கம் போதும் போதும்..

**பெண் :** ராசாவே உன்ன
காணாத நெஞ்சு
காத்தாடி போலாடுது
ஸ்ரீ ராமனோட பூ மாலை போட
வைதேஹி உள்ளம் வாடுது..

**பெண் :** ராசாவே உன்ன
காணாத நெஞ்சு
காத்தாடி போலாடுது..
காத்தாடி போலாடுது..